# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009

## HELD IN APRIL – 2009

## TML 1.21 – INRODUCTION TO TAMIL LANGUAGE AND FUNCTIONAL GRAMMAR

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தது இரண்டு (02) வினாக்களையேனும் தெரிவுசெய்து எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

01. தற்காலத்தில் தமிழ்மொழி பல நாடுகளிலும் வழங்கும் ஒரு மொழியாக மாறி வருகின்றது. இக்கூற்றினை விளக்குக.

02. தமிழ் பல்வேறு கிளைமொழிகளைக் கொண்ட ஒரு மொழியாகும். இக்கூற்றினைத் தக்க உதாரணங்களுடன் தெளிவுபடுத்துக.

03. தமிழ் எழுத்துக்களில் அண்மைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களை விளக்குக.

04. நடை என்பதன் மூலம் நீர் விளங்கிக்கொள்வது யாது? தமிழ்ச் செய்யுள் இலக்கியங்களில் காணப்படும் பிரதான நடை வேறுபாடுகளை விளக்குக.

### பகுதி – II

05. தமிழ் மொழியில் வழங்கும் பெயர்ச் சொற்களை வகைப்படுத்தி, அப்பெயர்ச் சொற்கள் ஆக்கப்படும் முறையினை விளக்குக.

06. இடைச் சொல் என்றால் என்ன என்பதை விளக்கி, தமிழ்ச் சொல்லாக்கத்தில் இடைச்சொற்களின் பயன்பாட்டை ஆராய்க.

07. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
    - (i) மூவிடப்பெயர்
    - (ii) பெயரடை
    - (iii) துணைவினை
    - (iv) உயிரீற்றுப்புணர்ச்சி
    - (v) வினைமுற்றுக்கள் திணை, பால், எண், இடம் உணர்த்துதல்

08. தேவையான இடங்களில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இட்டு, பின்வரும் உரைப் பகுதியை திருப்பி எழுதுக.

நானும் போறேம்மா லச்சம் அண்ணாவோட என்றாள் ரமணி

இந்தக் கேள்விக்கு லட்சுமி அன்று காலையில் மட்டும் பத்துப் பதினைந்து தடவை பதில் சொல்லியாயிற்று மீண்டும் கேட்கிறாள் ரமணி அதுதான் அவள் சுபாவம் லச்சம் சதா சுற்றிக்கொண்டு இருப்பவன் அவன் போகிற இடத்திற்கெல்லாம் இவளை அனுப்ப முடியுமா லச்சத்துடன் அன்று பாலு போக இருந்தான் ரொம்ப நாளாக லச்சம் ஆசைகாட்டி வந்த விஷயம் அது அவனுக்கு எப்படித்தான் புதுப்புதுச் செய்திகளெல்லாம் கிடைக்கிறதோ அன்று அரசாங்க பஸ்ஸின் வெள்ளோட்டமாம் பஸ்ஸில் இரண்டு பேரையும் ஓசியில் கூட்டிக்கொண்டு போக முடியும் என்றான் அவன் லட்சுமிக்கும் ஆனந்தத்துக்கும் அது எப்படி சாத்தியம் என்று புரியவில்லை ஆனால் லச்சம் தன் நம்பிக்கையில் உறுதியாக இருந்தான் லட்சுமிக்கு ரமணியை அனுப்பச் சற்றும் விருப்பம் இல்லை ஆனந்தத்திடம் ரமணிக்குத் தெரியாமல் யோசனை கேட்டாள் போணம்னு ஒத்தக் காலிலே நிக்கறதேடி அனுப்பவா ஆனந்தம் லட்சுமியின் முகத்தையே பார்த்தாள் அக்காவின் சந்தேகத்தை அவள் துருவி ஆராய்வது போல் இருந்தது ரமணியின் தோற்றம் அவள் கண்முன் வந்தது வெகு சமீபத்தில்கூட அவளைக் குழந்தையாக பாவிக்க முடிந்திருந்தது இப்போது அப்படி நினைக்க முடியவில்லை இழுத்து அணைத்துக் கொள்ளக்கூடக் கூச்சமாக இருக்கிறது ஒரு பெண்ணை ஸ்பரிசிப்பது போல் அவளுடைய உடல் மெத்தென்று இருக்கிறது அனுப்பணுமா அக்கா என்று இழுத்தாள் ஆனந்தம்

ஆனந்தத்தின் தயக்கம் லட்சுமிக்குப் புரிந்ததும் நானும் வேண்டாம்னுதான் நினைக்கிறேன் புருஷ பையன்களோட சேர்ந்து போற வயசா அவளுக்கு சொன்னா தெரிஞ்சாத்தானே என்றாள்

வள்ளி போற இடத்துக்குத்தான் போலாம்னு சொல்லுங்கோ என்றாள் ஆனந்தம்

நீ சொல்லுடி ஆனந்தம் எனக்குத் தொண்டைத் தண்ணி வத்தியாச்சு

ரமணியைத் தேடிக்கொண்டு போனாள் ஆனந்தம்

அன்று பிற்பகல் மூன்று மணிக்குச் சொல்லியிருந்ததுபோல் டாண் என்று வந்துநின்றான் லச்சம் பார்க்க எண்ணெய் மினு மினுப்புடன் குளிர்ச்சியாக இருந்தான் காக்கி நிக்கரும் இளநீலச் சட்டையும்

சட்டையில் இரு ஜேபிகள் ரமணிக்கும் பாலுவுக்கும் சட்டை அதிசயத்தைத் தந்தது அவன் கைகளை ஆளுக்கொன்றாகப் பிடித்தபடி அம்மாவிடம் இழுத்து வந்தார்கள்.

எதுக்கடா இரண்டு ஜேபி கோணங்கி மாதிரி என்றாள் ஆனந்தம்

இதுதான் இப்போ ஃபாஷன் என்றான் லச்சம். அவன் ஃபாஷன் என்று சொன்னது எல்லோருடைய மனதையும் அள்ளிற்று நிக்கருக்கும் ரெண்டு என்று சொல்லியபடி இரண்டு கைகளையும் ஜேபிகளினுள் நுழைத்தான்

பாக்க ராஜா மாதிரி இருக்கு என்றாள் லட்சுமி

ஆனந்த மாமி அவனுடைய சட்டை ஜேபியிலிருந்து ஒரு நாணயத்தை வெளியே எடுத்தாள் ஒரு சக்கரமா அடப் பாவி என்றாள்

லச்சம் ஒவ்வொரு ஜேபியிலிருந்தும் ஒரு சக்கரத்தை வெளியே எடுத்தான் ஒரு பணத்தை மாத்தி நாலு ஜேபியிலும் போட்டுண்டேன்.

அவனுடைய சந்தோஷத்தைப் பார்த்து ரமணிக்கும் பாலுவுக்கும் சந்தோஷம் பொங்கிற்று

வர வர பணக்காரன் ஆயிண்டே போறான் இந்தப் பயல் என்றாள் ஆனந்தம். என்னடா இது, மரத்துல காய்க்கிறதா காசு என்று கேட்டாள்

நான் சம்பாதிச்சது மாமி.

அந்த வித்தையை எனக்கும் சொல்லித் தாடா

அதைக் கேக்காதிங்கோ மாமி' என்றான் லச்சம். அவன் குரல் கெஞ்சுவது போல் இருந்தது

சொல்லுடா ராஜா எங்கிட்ட சொன்னா என்ன எனக்கும் கொஞ்சம் காசு சேக்க வேண்டியிருக்குடா என்றாள் ஆனந்தம்

வற்புறுத்த வேண்டாம் என்று கண்களால் ஜாடை காட்டினாள் லட்சுமி

காசை என்ன பண்ணப் போற என்றாள ஆனந்தம்

வைக்கத்து அஷ்டமிக்கு ரமணியையும் பாலுவையும் கூட்டிண்டு போவேன்

லட்சுமியின் முகம் மலர்ந்தது